**செய்தி வெளியீடு எண்: 07/2024** **நாள்: 09.01.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II தானியங்கி கட்டண வசூல் அமைப்பு மற்றும் மெட்ரோ இரயில் ஆகியவற்றின் நிதி தேவைக்காக ரூ.450 கோடிக்கு பாரத ஸ்டேட் வங்கிக்கு ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது**

ரூபாய் காலக் கடன் (Rupee Term Loan) மூலம், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் இரண்டாம் கட்டத்தில் தானியங்கி கட்டண வசூல் அமைப்பு (AFC) (கோயம்பேடு முதல் சிப்காட் வரை) பணிக்காக ரூ.150 கோடி மற்றும் இரண்டாம் கட்டமாக 30 மெட்ரோ இரயில் பெட்டிகளை வாங்குவதற்காக ரூ.300 கோடியும் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாம் கட்டப் பணிகளுக்கான நிதி தேவைக்காக உள்நாட்டு வணிக வங்கிகளுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இணைந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக நிதி இயக்குநர் டாக்டர் பிரசன்ன குமார் ஆச்சார்யா, பாரத ஸ்டேட் வங்கியின் கூடுதல் பொது மேலாளர் திரு.ஜலீல் ஹசனாத் சையத் உமர் அவர்களுக்கு இன்று (09.01.2024) ஏற்பு கடிதத்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் திரு. ஆர்.முரளி, (நிதி மற்றும் கணக்குகள்), பொது மேலாளர்கள் டாக்டர் டி.ஜெபசெல்வின் கிளாட்சன், (ஒப்பந்த மேலாண்மை), திரு. ஹரி கணேஷ், (நிதி மற்றும் கணக்குகள்), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**